தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
2023

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.
த.பெ.14, பேராதனை

உள்ளடக்கம்

01. அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு 01.

02. அத்தியாயம் 02- முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 02.

03. அத்தியாயம் 03- நிதி முன்னேற்றம் 03.

04. அத்தியாயம் 04- நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் 04.

05. அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை 05.

06. அத்தியாயம் 06- மனிதவள விபரம் 06.

07. அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை 07.

08. தாவரவியல் பூங்காக்கள் நம்பிகைை நிதியம் - வருடாந்த செயலாற்றுகை 08.

வருடாந்த முன்னேற்ற அறிக்கை 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொறுப்பு

1.1 அறிமுகம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது, தாவரவியல் நடவடிக்கைகள் தொடர்பிலான இலங்கையின் முன்னோடி நிறுவனமாகும். தாவர வெளிவாரிப் பேணுகை, தாவரங்களை இனங்காணல் மற்றும் அவை குறித்த கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் இலங்கையில் அலங்காரப் பூங்காவியலை ஊக்குவிப்பதற்கான ஆய்வு ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு பெரும் பங்களிப்பினைச் செய்வதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் திகழ்கிறது.

பிரித்தானியர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரதான பூங்காக்களான பேராதனை அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா (1876) மற்றும் கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா ஆகியவற்றோடு முறையே 2013, 2015 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா மற்றும் அவிசாவலை சீதாவக ஈர வலய தாவரவியல் பூங்கா ஆகியன பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தாவரவியல் பூங்காக்களில் 4500 க்கும் மேற்பட்ட தாவர வகைகள் பேணப்படுவதோடு அரிய வகைத் தாவரங்கள், காடுகளிலிருந்து அழிந்து போயுள்ள தாவரங்கள், இலங்கைக்கு மாத்திரம் உரிய தாவரங்கள், அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் ஆகியன பாதுகாக்கப்பட்டுள்ளன. அத்தோடு கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்கா இலங்கையின் மூலிகைத் தாவரங்களின் பாதுகாப்புக்கும் பரவுகைக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

தேசிய தாவரக்கயமானது தாவரவியல் மற்றும் தாவர வகைப்படுத்தல் குறித்த ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதோடு தாவரங்கள் குறித்த பல்வேறு தீர்மானங்களையும் உண்மைத்தன்மையை சான்றுப்படுத்தும் பணிகளையும் மேற்கொள்கின்றது. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகானது பூச்செடிச் செய்கை ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் நாட்டில் பூச்செடிச் செய்கையை ஊக்குவிக்கும் பணியை மேற்கொள்கின்றது. இத்திணைக்களத்தின் கல்வி மற்றும் பயிற்சி நிலையமானது, குறுங்கால கற்கை நெறிகள்,1 வருட மற்றும் 2 வருட டிப்ளோமா கற்கை நெறிகளையும் வெவ்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடாத்துகின்றது.

தாவரவியல் பூங்காக்கள், பொது மக்களுக்கு ஓய்வெடுத்தலுக்கான வசதிகளை வழங்குவதோடு, உலகின் பல பகுதிகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட தாவரங்கள் மேலும் தாவர இராச்சியத்தின் அழகையும் பன்மைத்துவத்தையும் பறை சாற்றுகின்றன. அத்தோடு தாவரப் பேணுகை, உயிரியல் பல்வகைமை, பூச்செடிச் செய்கை பற்றிய அறிவையும் பகிர்கின்றன.

1.2 . நிறுவனத்தின் நோக்கு,பணி மற்றும் நோக்கங்கள்

நோக்கு

தாவரவியல் மற்றும் அழகியல் நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் பேணிக்கொண்டு அயன வலயத்தின் மிகச் சிறந்த தாவரவியல் பூங்காவாக மாறுதல்.

பணி

இயற்கையான மற்றும் செயற்கையான சூழல்களில் காணப்படும் தாவர வளங்கள் பற்றி ஆய்வு செய்தல், அவற்றின் நிலையான பேணுகை மற்றும் அவற்றின் மதிப்பை அறிந்து கொள்ளும் பணிகளுக்காக பொது மக்களுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்களை தாவரங்கள் பால் சமீபமாக்குதல்.

நோக்கங்கள்

- இலங்கைத் தாவரங்களின் முறையான வெளிவாரிப் பேணுகை
- விஞ்ஞான,சட்டரீதியான மற்றும் வியாபார நோக்கங்களுக்காக தாவர இனங்கானல் மற்றும் உறுதிப்படுத்தல்
- இலங்கையில் பூ வளர்ப்புத் துறையை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
- தாவர வளங்களை விஞ்ஞான பூர்வமாகவும் முறையாகவும் நிர்வகிப்பதன் ஊடாக சட்ட ரீதியிலான மற்றும் தாவரங்கள் சார்ந்த தொழில் துறைகளுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்
- சுற்றுலா துறையின் நிலைபேரான அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியினை ஊக்குவிப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கும் சமூக மேம்பாட்டிற்கும் நேரடியான பங்களிப்பைச் செய்தல்.
- இலங்கையில் தாவர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேரான பயன்பாடு தொடர்பில் எதிர்கால தலைமுறையினரை அறிவூட்டுதல்.

1.3 திணைக்களத்தின் பிரதான பணிகள்

- இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரிப் பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்வதற்குத் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்

- கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவும் தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தலும் செயல்படுத்துதலும்.

- இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்தரத்தில் பராமரித்துப் பேணல்.

- பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.

- அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.

- இலங்கையின் அடையாளம் காணப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

- அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.

- தேசிய தாவரவியல் ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் தேவையான தகவல்களை தேசிய சிவப்புப் பட்டியல் தயாரிப்பதற்கும் ஏனைய கொள்கை முடிவுகளுக்கான தீர்மாணங்களை எடுப்பதற்கான தரவுகளை வழங்குதல்.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் - அங்கீகரிக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு



1.5 இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்

அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

1821ல் நிறுவப்பட்ட பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது தாவரப் பேணுகை, மக்களுக்குக் கல்வியூட்டல் மற்றும் இலங்கையின் பொருளாதார, சூழலியல் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் பங்காற்றுகின்றது.

கண்டி நகருக்கு அண்மையில் 61.25 ஹெக்டெயார் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பூங்காவானது, கல்வி, தாவரவியல் ஆய்வு, சூழலியல் மற்றும் அலங்காரப் பூங்காவியல் நிலையமாகவும் மக்களுக்கு ஓய்வளிக்கும் இடமாகவும் திகழ்கின்றது..

தேசிய தாவரக்கயம்

இலங்கையின் தாவரங்களின் உலர்ந்த தாவரக்கய மாதிரிகளை பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவக்கயமாகும். இங்கு 172000 க்கும் அதிகமான தேசிய மற்றும் வெளிநாட்டுத் தாவரங்களின் மாதிரிகள் முறையாக, ஆய்வுகளுக்கும் பரிசோதனைளுக்குமெனப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

தாவரக்கயத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகள் தாவர வகைப்படுத்தல் ஆய்வுகளுக்காகவும் உயிரினப் பல்வகைமைத் தரவு வங்கியொன்றாக தாவரங்களை அடையாளம் காணும் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன

ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல

ஹக்கல தாவரவியல் பூங்கா 1861 இல் உருவாக்கப்பட்டது. இப்பூங்காவின் தாவரங்கள் உப அயன வலயத்துக்குரியவையாகும். இங்கு உள்நாட்டுத் தாவரங்கள், மலையகத் தாவரங்கள், ஏனைய உப அயன வலய நாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தாவரங்கள் ஆகியன முறையாக நடப்பட்டுள்ளன.

ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா - கம்பஹா

கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா 1876ல் றப்பர் பயிர்ச் செய்கையை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. 17.4 ஹெக்டெயார் பரப்பைக் கொண்ட இப்பூங்கா வளமான வரலாற்றைக் கொண்டதும் தாவரவியல் மற்றும் அலங்காரப் பூச்செடியியல் கவர்ச்சியைக் கொண்டதுமாகும். இது இலங்கையையும் வெளிநாடுகளையும் சேர்ந்த 2000 த்துக்கும் அதிகமான தாவர வகைகளைக் கொண்டுள்ளது

பூச் செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு, பேராதனை.

பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளைச் செய்து இலங்கையின் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பது இவ்வலகின் பணியாகும்.

பயிற்சி நிகழ்ச்சிகளையும் கள ஆலோசனைகளையும் இத்துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் குறித்த தகவல்களை வழங்குவதிலும் பொருட்கள், உபகரணங்கள், தரமான உற்பத்தி சாதனங்கள் ஆகியனவற்றை பூ வளர்ப்போருக்கு வழங்குவதிலும் மாவட்ட மட்டத்தில் பூ வளர்ப்போர் சங்கங்களை அமைத்து அத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதிலும் இப்பிரிவு முனைப்போடு ஈடுபடுகின்றது.

மூலிகைப் பூங்கா, கனேவத்த

இப்பூங்காவானது வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 21.04 ஹெக்டெயார் பரப்புக் கொண்ட இப்பூங்காவில் பல வகைகளையும் சார்ந்த மூலிகைத் தாவரங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத, அரிய மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் மருந்து மூலிகைகளை முறையாக வளர்த்துச் சேமிப்பதும் இப்பூங்காவின் நோக்கங்களாகும். அத்தோடு மூலிகை விற்பனையிலும் முறையான மூலிகை வளர்ப்புப் பற்றிய அறிவை வழங்குவதிலும் இது ஈடுபடுகிறது.

உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை

இப்பூங்காவானது 130 வருடங்களுக்குப் பிறகு உள்நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது பூங்காவாகும். இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ளது. 2006 ம் ஆண்டில் இதன் அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2013 ம் ஆண்டு பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

உலர் மற்றும் அதி உலர் வலயத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பாதுகாப்பதும் உள் நாட்டுப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இதன் பிரதான குறிக்கோளாகும்.

சீத்தாவாக்கை ஈரவலய தாவரவியல் பூங்கா

_அவிசாவலைக்கு அண்மையில் அமைந்துள்ள இப்பூங்காவின் அபிவிருத்திப் பணிகள் 2008 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2015ம் ஆண்டு மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டது. இது 42.49 ஹெக்டெயார் பரப்பளவைக் கொண்டது.

ஈர வலய தாழ் நிலத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறை மூலம் பாதுகாப்பது இதன் பிரதான

சுவஹஸ் மல் செவன, கொழும்பு

நாரஹேன்பிடவில் அமைந்துள்ள இவ்வலகானது, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் 'சுவஹஸ்மல்' சங்கங்களின் அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் பூச்செடியியல் உற்பத்திகளை சந்தைப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பப் பரிவர்த்தனை ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

அதி மேதகு ஜனாதிபதி மற்றும் மாண்பு மிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்

அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கொழும்பு, கண்டி, நுவரெலியா, அனுராதபுர வாசஸ்தலங்களின் பூங்காக்கள் மற்றும் மாண்பு மிகு பிரதமர் அவர்களின் கொழும்பு மற்றும் நுவரெலியா வாசஸ்தலங்களின் பூங்காக்கள் இத்திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

பொதுநலவாய போர் சமாதிகள்

பொது நலவாய போர் சமாதிகள் கண்டி, ஜாவத்தை, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இரண்டு உலகப் போர்களிலும் இறந்த பொது நலவாய நாடுகளின் போர் வீரர்களை நினைவு கூரும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவையும் இத்தி ணைக்களத்தாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

பசுமை நிலையம், மீகல்லாவ

மீகல்லாவ பசுமை நிலையமானது வடமேல் மாகாணத்தில், குருணாகலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. தற்போது 2.43 ஹெக்டெயார் விஸ்தீரணம் கொண்டது. அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற இந்நிலையமானது பூச்செடியியல்துறையில் இத்திணைக்களத்த ின் உள்ளகப் பணியாளர்களுக்கும் பிரதேசப் பொதுமக்களுக்குமான பயிற்சி வழங்குவதற்கும் தாவர உற்பத்தி செய்கருக்குமான நிலையமாக

1.6 நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் - 2023

(மூலதன ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள்)

அரச தாவரவியல் பூங்கா-பேராதனை

- அலுவலர்களின் சேவைத் திருப்தியை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்குதங்குமிட வசதிகளை மேம்படுத்துவதற்காக, இல. 1080 உத்தியோகபூர்வ இல்லங்களின் புனரமைப்பு பணிகள் நிறைவடைநதுள்ளது.

மா ஓயா நீர் வழங்கல் தொகுதியின் அபிவிருத்திப் பணிகள்

- பூங்காவிற்கு வருகை தருகின்ற சிறுவர்களுக்கு தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான புதிய அனுபவங்களை வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் கல்விப் பகுதியின் அபிவிருத்திக்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- பூங்காவின் கவர்ச்சியையும் அலங்காரத்தையும் மேம்படுத்தும் நோக்கிலான நில அபிவிருத்திப் நடவடிக்கைகள் வடிகான் தொகுதியின் புனரமைப்புப் போன்ற பணிகள் நடைபெறுகின்றன
- அலுவலகப் பணிகளை எளிதாக்கும் வகையில், உளளக தொலைபேசி வலையமைப்பை நிறுவும் பணிகள் இவ்வாண்டு நிறைவடைந்தது.

.

- பூங்காவின் வரலாறு ,தாவர பயன்பாடு ,பூங்காக்களின் பரிணாமம் மற்றும் பூங்காக்களின் மரபுரிமை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் விதத்தில் தகவல் நிலைய மொன்றுடனான நூதனசாலை அரச தாவரவியல் பூங்காவினுள் நிர்மாணிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் அதன் உள்ளக வடிவமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது.நாட்டில் நிலவிய எரி பொருள் தடடுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அதன் நிறைவுப் பணிகள் பின்போடப்பட்டது.இவ்வாண்டு அப்பணிகள் பூரணப்படுத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்படவுள்ளது.
- பூங்காவில் தாவரப் பராமரிப்புக்கான நீர் விநியோகத்தைப் பெறுவதற்காக, மா ஓயா நீரைப் பெறுவதற்கான திட்டத்தின் ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஆண்டு முழுவதும் நிலவிய மழையுடனான காலநிலை காரணமாக அப்பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை. 2024 இல் அப்பணிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- பூங்காவிற்கு வருகை தரும் தேசிய மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நினைவுப் பரிசுகளைப் கொள்வனவு செய்யும் லக்சல கட்டிடத்தின் மேற்கூரையில் பழுதுபார்க்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், வருடம் முழுவதும் நிலவிய மழை காரணமாக் அப்பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை. எனினும் இப்பணிகள் 2024ல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- தாவரப் பேணுகை நடவடிக்கைள் பலப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 99,405 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன

அருங்காட்சியகத்தின் வெளிப்புற பகுதிகளில் அபிவிருத்தப் பணிகள் நடைபெருகின்றது.

ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா, கம்பஹா

பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவில் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பூங்காவிற்கான புதிய நுழைவுப் பாதைக்கான பாதுகாப்பு கேட் நிறுவப்பட்டுள்ளது

- பூங்காவில் காணி அபிவிருத்தி , பூமி அலங்கார மேம்பாட்டு பணிகளுடன் பூங்காவினை அழகுபடுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், பூங்காவிற்கான புதிய உட்பிரவேசப் பாதையில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வாயிலின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன
- பூங்காவிற்கு நீரை வழங்கும் நீர் தாங்கியின் 60% பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் ஆண்டு முழுவதும் நிலவிய மழை காரணமாக் கட்டுமானப் பணிகள் தாமதமானது, இப் பணிகள் 2024 ஆம் ஆண்டில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது..
- பூங்காவிற்கு வருகை சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதலான வசதிகளை வழங்கும் நோக்கில் பூங்காவின் உட்கட்டமைப்பை மேலும்

நீர் தாக்கியின் கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றது.

மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட புதிய கழிவறை தொகுதியன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அத்தனகலு ஓயா வெள்ளப் பெருக்கு காரணமாக அப் பணிகளை நிறைவு செய்ய முடியாது போனது. எனினும் அப்ப பணிகள் 2024ல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 29000 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.

ஹக்கல தாவரவியல் பூங்கா

பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவில் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

- பூங்காவின் திறம்பட நிறைவேற்றுவதற்காக புதிய தோட்ட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் மற்றும் வசந்த வீடுகளுக்குக் வர்ணம் பூசுதல், கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு வர்ணம் பூசுதல் போன்ற பல நடவடிக்கைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 211,392 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.

பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட பூமி அலங்கார நடவடிக்கைகள்

தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர பூ வளர்ப்போரை பலப்படுத்தி அவர்களது பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இவ்வருடமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- நாடாளாவிய ரீதியில் பூச்செடியியலை விஸ்தரிக்குமுகமாக பூ வளர்ப்போர் சங்கங்கள் 216 செயற்படுவதோடு அவற்றினூடாக சுமார் 8000 பேர் நன்மையடைகின்றனர். அந்தூரியம், ஓக்கிட், ரோசா, ஜெர்பரா, வெட்டு இலைகள் மற்றும் இழைய வளர்ப்பு ஆகிய துறைகள் பற்றிய ஒருநாள் பயிற்சி நெறிகள் மூலம் 11881 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு பூ வளர்ப்பு பற்றிய விளக்கமளித்தல்

- பூ வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவின் ஊடாக சுமார் 152,136 கும் மேற்பட்ட ஓக்கிட், அந்தூரியம் மற்றும் அலங்கார இலை தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

பூ வளர்ப்பு ஆராய்ச்சிக்கான வருடாந்த ஆய்வரங்கு (NaSFLOR-2023)

- பூ வளர்ப்போரது உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சிற்றளவிலான கண்காட்சிகள் 215 ம் பாரிய அளவிலான கண்காட்சிகள் 08ம் நடாத்தப்பட்டன. பூ வளர்ப்போரது 1,239 நாற்று மேடைகளுக்கு சென்று களப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- பூ வளர்ப்பு ஆராய்ச்சி தொடர்பான தேசிய மாநாடு இந்த ஆண்டும் டத்தப்பட்டு, பூ வளர்ப்புத் துறையின் அபிவிருத்திக்கான ஆய்வுக் கட்டுரைகள் 17 சமர்ப்பிக்கப்பட்டன.

அபிவிருத்தி செய்யப்படும் அந்தூரியம் காட்சி வீடு

- . தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை மன்றம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த பூ செடியியல் ஆராய்ச்சிக்கான வருடாந்த தேசிய ஆய்வரங்கு (NaSFLOR-2023), 2023 டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி பேராதனை அரச தாவரவியல் பூங்கா வளாகத்தில் நடைபெற்றது. இந்த ஆய்வரங்கின் நோக்கம் பூ வளர்ப்புத் துறை தொடர்பான சமீபத்திய மற்றும் தற்போதைய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை முன்வைத்து விவாதிப்பதாகும். "Harvesting Tomorrow: Applied Research in Floriculture for a Sustainable Future," " என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இவ்வருடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ்வாய்வரங்கில் பூ வளர்ப்புத் தொழிலின் நிலையாதாரம் மற்றும் ஊக்குவிப்பு, பூ வளர்ப்பின் சிக்கல்களுக்கு நடைமுறை தீர்வுகளை வழங்குவதற்கான புதுமையான அணுகுமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இங்கு, தாவரங்கள் மற்றும் இரசாயன மருந்துகளைப் பயன்படுத்துதல், தாவர நுண் பரப்புதல் , தாவர அறிவியல் மற்றும் பாரம்பரிய தாவரப் இனப்பெருக்கம் போன்ற துறைகளில் இடைம்பெற்ற கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தும் 18 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. பூ வளர்ப்புத் துறையுடன் தொடர்புடைய ஆராய்ச்சியாளர்கள், தொழில் வல்லுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும்

நடைபெற்ற மலர் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பூச் செடிகள்

பங்குதாரர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த ஆய்வரங்கில் சுமார் 170 பேர் கலந்து கொண்டனர். NaSFLOR-2023 திட்டமானது அறிவைப் பரப்புவதற்கும், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிபுணர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் ஒரு தளமாக மேம்படுத்துவதற்கும் பங்களிக்கிறது. இலங்கையில் பூ வளர்ப்புத் துறையின் நிலைபேரான எதிர்காலத்திற்கு இது ஒரு முக்கியமான உந்து சந்தி எனவும் இதனைக் குறிப்பிடலாம்.

- பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் பூச் செடிச்செய்கைப் பிரிவில் நிறுவப்பட்டுவரும் அந்தூரியம் காட்சி இல்லத்தின் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகள் 2024 ஆம் ஆண்டில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி மற்றும் பயிற்சி நிலையம்

பேராதனை தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தப்பட்டு திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- 75 மாணவர்கள பூச்செடியியல் நில அலங்காரம் பற்றிய தொழில்நுட்பப் பூபயிற்சியை முடித்துள்ளதுடன், 55 பேர் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்
- நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்களுக்கான தேசிய தொழில் பயிலுனர் தகைமைச் சான்றிதழ் - 4ம் மட்டத்தினை (NVQ- Level 4) வழங்கும் ஒரு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு 20 பேர் தம்மைப் பதிவு செய்து கொண்டு கற்கையைத் தொடர்கின்றனர்.
- மேலும், 118 மாணவர்கள் நடைமுறைப் பணியிடைப் பயிற்சிக்காக பதிவுசெய்துள்ளதுடன் பல்கலைக்கழகத்தில் இயற்கையை பூமி அலங்காரத் துறையில் கௌரவ பட்டம் பெற்ற மாணவர்கள் ஒரு மாத தொழில்முறை பயிற்சி வகுப்பை முடித்தனர்.
- ரோசா வளர்ப்பு, நாற்றுமேடை முகாமை, தாவர அடையாளம் காணல், பூச்செய்கையின் பெருமதி சேர்த்தல், பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், நில அலங்காரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து 4805 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது

சீதாவாக்கை ஈர வலய தாவாரவியல் பூங்கா, அவிசாவலை

கழிவறை தொகுதியின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

- பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவின் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
- பூங்காவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பூங்காவின் அழகைக் இரசிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புச் காட்சி முனைக்கு டைல்ஸ் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, எஞ்சிய பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன

- மேலும், பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கட்டப்பட்ட கழிவறை தொகுதியின் கட்டுமானப் பணிகள் இவ்வாண்டு நிறைவு பெற்றது.

டைல்ஸ் பதிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மிரிஜ்ஜவில, உலர் வலய தாவரவியல் பூங்கா, அம்பாந்தோட்டை

பூங்காவின் அடிப்படை மற்றும் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு இவ்வருடமும் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் தாவரவியல் பூங்காக்கள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் 130 வருடங்களுக்குப் பிறகு இலங்கையின் தாவரவியல் விஞ்ஞானிகளால் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது தாவரவியல் பூங்கா இந்த ஆண்டு தனது பத்தாவது ஆண்டு விழாவை பெருமையுடன் கொண்டாடியது.குறிப்பாக பூ வளரப்போரை ஊக்குவித்து அவர்களின் தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்காக மலர் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. தாவர பன்முகத்தன்மை மற்றும் பல்லுயிர் பெருக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன இதன் போது ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டன. இந் நிகழ்சிகளில் 5,061 பாடசாலை மாணவர்கள், 407 ஆசிரியர்கள், 140 அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர், மேலும் 28 கண்காட்சிச் கூடங்களும் மற்றும் வணிகக் கூடங்களும் அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான அறிவு , உணவு மற்றும் ஏனைய பொருட்களும் வழங்கப்பட்டன.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள சைன்லிங் வேலி

பொருத்துதல்களுடன் கூடிய புதிய கழிப்பறை தொகுதி

- அன்றாடம் பொதுமக்கள் பார்வையிட முடியாத பூங்காவில் உள்ள தாவர இல்லங்களை பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.இதன் மூலம் பூங்கா நாற்று மேடைகள் , ஓர்க்கிட் காட்சி வீடுகள், அலங்கார இலை காட்சி வீடுகள், அந்தூரியம் காட்சி வீடுகளையும் அவற்றில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் அறிந்து கொள்ளவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

மிரிஜ்ஜவில உலர் வலயப் பூங்காவின் பூங்காவின் 10 வருட நிறைவு விழாவின் போது..

- பூங்காவின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் நீர் இறைக்கும் நிலையத்திற்கு அருகில் உள்ள பாதுகாப்புக் கூடத்தின் அபிவிருத்திப் பணிகள் இவ்வருடம் நிறைவடைந்தன.

- வெளியில் இருந்து பூங்காவிற்குள் நுழையும் விலங்குகளின் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பதற்காக செயின்லிங் இணைப்பு வேலி அமைக்கப்பட்டு அப்பணி நிறைவு செய்யப்பட்டது.

- பூங்காவின் தாய்த் தாவரங்களின் சேகரிப்பை பலப்படுத்தத் தேவையான தாவர வகைகள் கொள்வனவு செய்யப்பட்டதோடு உயிர்த்தாவரச் சேகரிப்பும் மேம்படுத்தப்பட்டது. மேலும் இப்பூங்காவில் 46,426 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன

கனேவத்த மூலிகைப் பூங்கா அபிவிருத்தி

- பூங்காவின் வெளிப்புற தோற்றத்தை அழகுபடுத்தும் நோக்கில் கட்டிடங்கள் மற்றும் பிற கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை சிறப்பாக மேற்கொள்ளப்படடு பூங்காவை உயர் மட்டத்தில் பராமரித்துப் பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- பூங்காவிற்கு வருகை தருகின்ற பார்வையாளர்களின் வசதிகளை மேலும் மேம்படுத்தும் வகையில், புதிய கழிவறை தொகுதியொன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளன.

உள்ளக நீர் விநியோக தொகுதி

- பூங்காவில் புதிதாக மரங்களை நடும் செயல் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, 30,331 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, புதிய தாவர சேகரிப்பு உட்பட தாவர சேகரிப்புகள் மேம்படுத்தப்படடுள்ளன.

- மூலிகை பற்றிய விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் 599 பேருக்கு மூலிகைத் தாவரப் பயன்பாடு, மதிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து விரிவுரைகள் வழங்கப்பட்ட

- பூங்காவில் நீர் விநியோகத்தை சிறப்பாக மேற்கொள்ளும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட உள்ளக நீர் விநியோக தொகுதியன் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன.

மீகல்லாவ பசுமை இல்லப் பயிற்சி நிலையம்

- தாவரங்கள் மற்றும் பூங்காவை பராமரித்தல் உள்ளிட்ட நில அபிவிருத்திப்பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுட்டன.

- இவ் ஆண்டும் தாவரங்கள் நடுகை திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தாவரங்கள் உருவாக்கப்பட்டு தாவர சேகரிப்புகளும் மேம்படுத்தப்பட்டன
- பல்வேறு தாவரங்கள் இல்வலாகத்தில் பயிர்செய்யப்பட்டுள்ளதுடன் அன்றாட பழுதுபார்த்தல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.
- இந்த ஆண்டும் தாவரங்கள் நடுகை திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் 14,946 க்கும் மேற்பட்ட நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, புதிய தாவர சேகரிப்புகளை உருவாக்குதல் உட்பட தாவர சேகரிப்புகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- பயிற்சி நடவடிக்கைகளுக்காக வரும் பயிற்சியாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட வெளிக்கள கட்டடத்தின் கூரை பழுதுபார்க்கும் பணிகள் நிறைவடைந்தன
-

அனைத்துப் பூங்காக்களையும் செயற்றிறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான புதிய பொறிகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு, பாவனையில் இருக்கும் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டு பூங்காக்களின் அலங்காரம் உயரிய முறையில் பேணப்பட்டன.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது கொழும்பு 01, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைகள், மாண்புமிகு பிரதமர் அவர்களது கொழும்பு அலரி மாளிகை மற்றும் நுவரெலியா வாசஸ்தலம் ஆகியவற்றின் பூங்காக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டன.

அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களது பூங்காக்களை அழகுபடுத்தி ஒழுங்குபடுத்துவதற்கென திட்டமிடப்பட்ட பிரகாரம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அனுராதபுர புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணல் நடவடிக்கைகள் இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டன. மேலும் அனுராதபுர புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணும் நடவடிக்கையாக காற்றினால் ஏற்படும் சேதத்தை குறைக்கும் பொருட்டு அவ்வலாகத்தில் நடுவதற்காக பிஹிம்பிய,நெல்லி, ,மருதம்,வேப்பம்,வாகை,கூலம்,ஹலம்பை,இழுப்பை,நாகை மற்றும் புளியம் போன்ற மரக் கன்றுகள் 120 வழங்கப்ட்டன.

அனைத்து பூங்காக்களின் நில அலங்காரப் பணிகள் சிற்பான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், நடைபாதைகள், உள்ளக வீதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. மேலும் பூங்காக் சிறப்பாக பராமரிக்கப்பட்டு அவற்றின் தரம் மிகச்சிற்பாக பேணப்பட்டது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தி திட்டங்களும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களுத்தின் மூலதன நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்துடன் தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் பின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.7 பார்வையாளர்களின் வருகை

இவ்வருடம் பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த மொத்தப் பார்வையாளர்கள் எண்ணிக்கை 152,858ஆகும். இவர்களுள் 1,925,129 உள்நாட்டவர்களும் 227,729 வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர்

1.7.1 2023 ம் ஆண்டு பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை



பூங்காக்களை பார்வையிட வருகைதந்த
உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை



2022 மற்றும் 2023 பூங்காக்களைப் பார்வையிட வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை ஒப்பீடு

1.7. 2. 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை தாவரவியல் பூங்காக்களுக்கான பார்வையாளர்களின் வருகை பற்றிய தகவல்

விபரம்	ஆணடு				
	2019	2020	2021	2022	2023
உள்நாட்டு பார்வையாளர்கள்	2,098,202	642,573	714,493	1,773,048	1,925,129
வெளிநாட்டு பார்வையாளர்கள்	331,888	93,304	18,412	103,322	227,729
மொத்தம்	**2,430,090**	**735,877**	**732,845**	**1,876,370**	**2,152,858**

2019 ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை சுற்றுலாப் பயணிகள் மூலம் திணைக்களத்துக்குக் கிடைத்த மொத்த வருமானம்.

விபரம்	ஆணடு				
	2019	2020	2021	2022	2023
உள்நாட்டு பார்வையாளர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் (ரூ.மில்)	130.937	67.91	64.6	143.31	224.429
வெளிநாட்டு பார்வையாளர்கள் கிடைக்கப்பெற்ற வருமானம் (ரூ.மில்)	537.092	181.829	35.785	200.18	567.897
மொத்தம் (ரூ.மில்)	668.029	249.739	100.385	343.49	792.327

அத்தியாயம் 02- முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 விஷேட வெற்றிகள்

- இலங்கை வரலாற்றில் 2023 ஆம் ஆண்டில் தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தினம் அதிகூடிய வருமானத்தை பதிவு செய்யுள்ளது.
- இலங்கையின் தாவரவியல் விஞ்ஞானிகளால் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது தாவரவியல் பூங்கா இந்த ஆண்டு தனது பத்தாவது ஆண்டு விழாவை பெருமையுடன் கொண்டாடியது.
- 2022 ஆம் ஆண்டை விட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 120% அதிகரிக்க முடிந்தது.
- பூச் செடியில் மற்றும் பூ அலங்காரம் பற்றிய NVQ 5 தேசிய டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு தொழில் திறன் சான்றிதழ்களை வழங்க முடிந்தமை
- ஒன்லைன் டிக்கெட் முறை அறிமுகப்படுத்தப்பட்டமை

2.2 சவால்கள்

- ❖ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காரணிகளால் ஏற்படுகின்ற அரசியல்,பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களின் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு ஏற்படுகின்ற அச்சுருத்தல்கள்.

- ❖ காலநிலை மற்றும் சுழல் மாற்றங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்

- ❖ புதிய தாவரவியல் பூங்காக்களை அமைப்பதற்கு பொருத்தமான காணிகளை அடையாளம் கண்டு அவற்னை பெற்றுக்கொள்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள்

- ❖ சர்வதேச மட்டத்திலான பிரச்சாரங்களை முன்னெடுப்பதலில் ஏற்பட்ட சிக்கல்கள்.

- ❖ அரசியல் பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள் (ஆட்சேர்ப்பு கட்டுப்பாடு)

2.3 இலக்குகள்

- ❖ சகல தாவரவியல் பூங்காக்களையும் சர்வதேச தரச்சிறப்பைப் பேணி தெற்காசிய வலயத்தில் சிறந்த தாவரவியல் பூங்காக்களாக மாற்றியமைத்தல்
- ❖ இலங்கையின் தாவரங்கள் தொடர்பில் தேசிய தரவுத்தளத்தை மேம்படுத்திப் பராமரித்தல்
- ❖ தேசிய மூலக்கூறு உயிரியல் ஆய்வு கூடத்தை அமைத்தல்
- ❖ இலங்கைக்குரிய தாவர இனங்களில் 50% த்தினை 2030 ஆம் ஆண்டாகும் போது தாவரவியல் பூங்காக்களில் வெளிவாரிப் பேணுகை செய்தல்
- ❖ பூங்காவியல் அலங்காரம் மற்றும் பூச் செடியியல் தொடர்பில் பட்டப்படிப்பை நடாத்தும் நிறுவனமாக அபிவிருத்தி செய்தல்
- ❖ பூங்காவியல் அலங்காரம் மற்றும் பூச் செடியியல் தொடர்பில் தேசிய டிப்லோமா பயிற்சி நெறியின் NVQ 5,6 மட்டத்தினை ஆரம்பித்து தொழில் தேர்ச்சி சான்றிதழை வழங்குதல்
- ❖ சூழல்சார் விஞ்ஞானக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
- ❖ உரிய SDG இலக்குகளை பூர்த்தி செய்தல்.
- ❖ ஓன்லைன் நுழைவுச் சீட்டு முறையினை அறிமுகப்படுத்துதல்
- ❖ பார்வையாளர்களை கவருவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.
- ❖ உற்பத்தித்திறன் தங்க விருதைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

- ❖ சிறந்த சுற்றுலா மையம் எனும் விருதைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- ❖ சகலருக்கும் முறையான, சம தரத்திலான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் பூராகவும் கற்கும் வாய்ப்பை வழங்குதல
- ❖ உயிரியல் பல்வமைையினைப் பாதுகாத்து பாலைவனமயமாக்களைத் தடுத்து தாவரங்களைப் பாதுகாப்பதின் ஊடாக சூழல் சமநிலையைப் பாதுகாத்தல்
- ❖ தற்போது தாவரவியல் பூங்காக்கள் அமைக்கப்படாத் விஷேட பிராந்தியங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை அமைத்தல்
- ❖ சிறிய மற்றும் நடுத்தர பூக்கள் மற்றும் அலங்காரப் பூக்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புக்களை அதிகரித்து பூ வளர்ப்போர் சங்கங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- ❖ **இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கு சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை தாவரவியல் பூங்காக்கள் மூலம் வழங்குதல்.**

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023 (ரூபா)		குறிப்பு	உண்மை நிலை 2023 (ரூபா)	உண்மை நிலை 2022 (ரூபா)	
750,000,000	**வருமானப் பெறுகைகள்**		833,193,462	388,379,319	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ஏசீஏ-1
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	833,193,462	388,379,319	ஏசீஏ-1
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		833,193,462	388,379,319	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		57,230,000	333,361,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		111,564,644	135,651,106	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		33,706,010	31,640,230	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**202,500,654**	500,652,336	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**1,035,694,116**	889,031,655	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		248,795,769	-	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		786,898,347	889,031,655	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	ஏசீஏ-2(ii)
476,197,274	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	457,434,174	460,178,184	ஏசீஏ-2(ii)
152,802,726	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	139,025,422	111,421,407	ஏசீஏ-2(ii)
1,500,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	1,244,498	1,320,040	ஏசீஏ-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ஏசீஏ-2(ii)
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	ஏசீஏ-2(ii)
630,500,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**597,704,094**	572,919,631	
	மூலதன செலவினம்				
19,500,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	8,858,414	26,944,645	ஏசீஏ-2(ii)
29,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	21,620,328	21,525,172	ஏசீஏ-2(ii)
70,000,000	மூலதன மாற்றல்கள்	12	50,251,047	74,225,000	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13		-	ஏசீஏ-2(ii)
500,000	திறன் விருத்தி	14	493,790	437,475	ஏசீஏ-2(ii)
54,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	32,868,196	45,050,906	ஏசீஏ-2(ii)
173,500,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**114,091,775**	168,183,198	
	வைப்புக் கொடுப்பனவுகள்		74,127,837	132,030,235	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		28,567,225	31,132,742	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்			-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		102,695,061	163,162,977	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		814,490,930	904,265,806	
-	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		(27,592,583)	(15,234,151)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		27,592,583	15,234,151	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

	குறிப்பு	2023 ரூபா	2022 ரூபா
நிதி சொத்துக்கள் அல்லாத			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண	ஏசீஏ -6	8,020,928,718	7,813,559,403
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ -5/5(ஏ)	90,012,918	95,151,703
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ -3	-	-
மொத்த சொத்துக்கள்		**8,110,941,637**	**7,908,711,106**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(187,059,196)	(144,483,604)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		8,020,928,718	7,813,559,403
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	**ஏசீஏ -5(ஆ)**		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ -4	277,072,114	239,635,307
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ -3		-
மொத்தப் பொறுப்புக்கள்		**8,110,941,637**	**7,908,711,106**

பக்க இலக்கம் ..7... முதல் ..32.. வரை ஏசஏ 1 முதல் ஏசஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ..33... முதல் ..37.. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால்

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ ஆணையாளர்(நிதி)
பெயர்:	பெயர்:	பெயர் :
பதவி :	பதவி :	
திகதி : 2024.02.22.	திகதி : 2024.02.14	திகதி : 2024.02.14

H.M.S.P. Herath
Secretary
Ministry of Tourism and Lands
No. 696/4,
Maradana Road, Colombo 10.

H.C.P. JAYAWEERA
DIRECTOR GENERAL
Dept. of National Botanic Gardens
PERADENIYA

V.G.C. NADEESHA GAMAGE
CHIEF ACCOUNTANT
Dept. of National Botanic Gardens
Peradeniya

	[illegible]	[illegible]
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த, வரிப் பெறுகைகள்		
பத்திரங்கள்	833,193,462	388,379,319
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	44,773,980	38,103,292
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	57,230,000	333,361,000
முற்பணங்களை அறவிடல்	32,638,834	30,472,657
வைப்புக்களின் பெறுகை	111,564,644	135,651,106
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**1,079,400,920**	**925,967,374**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	594,856,521	643,629,437
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	51,495,546	75,545,040
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	17,717,296	22,104,747
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	248,795,769	-
முற்பணக் கொடுப்பனவு	28,567,225	31,132,742
வைப்புக் கொடுப்பனவு	74,127,837	132,030,235
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**1,015,560,192**	**904,442,201**
(இ)=(அ)-(ஆ)	**63,840,728**	**21,525,173**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	63,840,728	21,525,173
மூலதன செலவினம்	63,840,728	21,525,173
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)		
	(63,840,728)	**(21,525,173)**
(ஊ)=(ஈ)-(உ)		
	0	-
தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)		
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)		
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-

ஏசீஏ - 1(ii)

வேறுபாடுகளுக்கான விளக்கம்

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர் : பணிப்பாளர் நாயகம் தேசிசெலவின தலைப்பு இ 322

ரூபா

அரசிறை குறியீடு	விபரம்	மூல மதிப்பீடு	திருத்தப்பட்ட மதிப்பீடு	ஆரம்ப மதிப்பீட்டின் % சதவீதமாக வேறுபாடு	வேறுபாட்டுக்கான காரணம்
2003.02.19	උද්භිද උද්‍යාන ආදායම	250,000,000	750,000,000	300%	தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவு கட்டணம் 01.07.2003 முதல் திருத்தப்பட்டது. (மே 22 திங்கள் அன்று வர்த்தமானி எண். 2333/15-2023)

2024/02/14

திகதி

பிரதான நிதி உத்தியோகத்தரின்/ பிரதான கணக்காளரின்/ நிதிப் பிரிவுத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

V.G.C. NADEESHA GAMAGE
CHIEF ACCOUNTANT
Dept. of National Botanic Gardens
Peradeniya

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பம்

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பெயர்

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதவி

H.C.P. JAYAWEERA
DIRECTOR GENERAL
Dept. of National Botanic Gardens
PERADENIYA

2023 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்

செலவின தலைப்பு இல : 322

அமைச்சின் / திணைக்களத்தின்: தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.

ரூபா

வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல.	செலவினத் தலைப்பு	வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	மொத்தச் செலவினம் (5)	தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (6)=(4)-(5)
நிகழ்ச்சித் திட்டம் (1)	(1) மீண்டுவரும்						
	(2) மூலதனம்						
	உப மொத்தம்						
நிகழ்ச்சித் திட்டம் (2)	(1) மீண்டுவரும்	630,500,000	0	0	630,500,000	597,704,094	32,795,906
	(2) மூலதனம்	169,500,000	4,000,000	0	173,500,000	114,091,775	59,408,225
	உப மொத்தம்	800,000,000	4,000,000	-	804,000,000	711,795,869	92,204,131
	முழு மொத்தம்	800,000,000	4,000,000	-	804,000,000	711,795,869	92,204,131

2024/02/14

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

V.G.C. NADEESHA GAMAGE
CHIEF ACCOUNTANT
Dept. of National Botanic Gardens

அத்தியாயம்-4 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள்

4.1 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள்

	குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீத்ததை (%) உண்மையான வெளியீடு		
		100% - 90 %	75% - 89%	50 % - 74 %
1	தாவரங்கள் தொடர்பிலான தேசிய தரவு வங்கியை இற்றைப்படுத்தல			
	• வெளிக்கள சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கை			√
	• அடையாளம் காணப்பட்ட தாவர இனங்கள்		√	
	• அடையாளம் காணப்பட்ட புதிய தாவர இனங்கள்			√
2	தாவர வெளிவாரிப் பேணுகை முறைமையுனூடகப் பாதுகாத்தல்			
	• தாவர வெளிவாரிப் பேணுகை முறைமையுனூடகப் பாதுகாக்கப்பட்ட தாவரங்கள்	√		
	• வெளிக்கள சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கை			√
3	உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகள்	√		
4	மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்	√		
5	தேசிய தாவரக்கய அபிவிருத்திப் பணிகள்			
	• புதுப்பிக்கப்பட்ட ஆய்வுக்கூடங்கள்	√		
	• நவீனமயமாக்கப்பட்ட ஆய்வுக்கூடங்கள்	√		
	• புதிதாக கட்டப்பட்ட ஆய்வுக்கூடங்கள்			√
6	• கல்வி,பயிற்சிகள் மற்றும் தகவல்களை வழங்குதல்			
	• கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்			√
	• பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்			√
	• தகவல் வழங்கப்பட்ட நபர்கள்			√
7	பூங்காக்களுக்கு வருகைதரும் பார்வையாளர்களுக்கான வசதிகளை			

	மேம்படுத்தல்			
	• பார்வையாளர்களின் எண்ணிக்கை			√
	• குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்		√	
	• புதிய கட்டிடங்களின் நிர்மாணப் பணிகள்		√	
8	பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்			
	• பூச்செடியியல் கண்காட்சிகள்	√		
	• பூ வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்புக்கள்.	√		
	• பூ வளர்ப்போருக்கு வினியோகிக்கப் பட்ட பொருட்கள்	√		
9	அலுவலர்களின் வசதிகளை மேம்படுத்துதல்			
	• ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.		√	
	• கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள்	√		
	• நிர்மாணிக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடங்கள்	√		
	• நிர்மாணிக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட வாசஸ்தளங்கள்			√
10	இலங்கையின் மொத்தப் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பு செய்தல்			
	• வருடாந்த வருமானம்	√		
	• உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்	√		
	• வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்	√		

அத்தியாயம் 5 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு பிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டல்

இலக்குகள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்		
			0-49	50-74	75-100
